# 40,000 தேசியக் கொடிகளை விநியோகிக்கிறது மாநகர் மன்றம்

கோலாலம்பூர், ஜூலை 31-

இவ்வாண்டின் தேசிய தினம் மற்றும் மலேசிய தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு கோலாலம்பூர் மாநகர் மன்றம் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தேசியக் கொடிகளை ( ஜாலூர் கெமிலாங்) விநியோகம் செய்யவுள்ளது. அரசாங்க முகமைகள், அரசு சார்பற்ற அமைப்புகள், குடியிருப்போர் பிரதிநிதித்துவ மன்றங்கள், குடியிருப்போர் சங்கங்கள், கல்வி அமைப்புகள் போன்றவற்றுக்கு அவை விநியோகிக்கப்படும் என்று பிரதமர்துறை (கூட்டரசு பிரதேசம்) அமைச்சர் டாக்டர் ஜலீஹா முஸ்தாபா தெரிவித்தார்.கோலாலம்பூர் மாநகரவாசிகள் சுதந்திர தினத்தை ஒற்றுமையுணர்வுடன் கொண்டாடி



மகிழ்வதற்காக தேசியக் கொடிகள் விநியோகிக்கப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கோலாலம்பூரில் உள்ள பதினோரு நாடாளுமன்றத் தொகுதிகளின் பிரதிநிதிகளிடம் தேசியக் கொடிகளை அவர் ஒப்படைத்தார்.